**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**
**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**
**MCOP . No.169/2023**

**நாள் : 04.02.2026**

**எ.ம.சா.** 1 (எதிர்மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.தனஞ்செழியன் | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| தந்தை / கணவர் பெயர் | : | திரு.குபேந்திரன் | வயது | : | 43 |
| ஊர் | : | கோணாமங்கலம் | தொழில் | : | அரசு பேருந்து ஓட்டுநர் |
| வட்டம் | : | சேத்துப்பட்டு | தேசியம் | : | இந்தியன் |

நான் இந்த வழக்கில் எதிர்மனுதாரரான அரசு பேருந்து ஓட்டுநர் ஆவேன். விபத்து சமயத்தில் அரசு பேருந்தை ஓட்டி வந்தவர் என்ற முறையில் வழக்கு விவரங்கள் எனக்கு பரிட்சயம். இந்த வழக்கிற்கான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை மற்றும் உண்மையானவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

1. குற்ற இறுதி அறிக்கை நகல் – எ.ம.சா.ஆ.1

2. மனுதாரரின் விபத்து பதிவேட்டு நகல் – எ.ம.சா.ஆ.2

3. புகார் மனு நகல் – எ.ம.சா.ஆ.3

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

விபத்து சமயத்தில் TN 25 N 0687 என்ற அரசு பேருந்தை ஓட்டிச் சென்றேன் என்றால் சரிதான். விபத்தானது இரவு 8.30 மணியளவில் நடந்தது. விபத்து சமயத்தில் நான் பெங்களூரில் இருந்து திருவண்ணாமலை நோக்கி சென்று கொண்டிருந்தேன் என்றால் சரிதான். ஊத்தங்கரையில் உள்ள அதியமான் சி பி எஸ் சி பள்ளி அருகே விபத்து நடந்தது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் மனுதாரர் எனக்கு எதிர்திசையில் வந்தார் என்றால் சரிதான்.

அரசு பேருந்து மோதியதில் மனுதாரர் மயக்கமாகி கீழே விழுந்துவிட்டார் என்றால் சரியல்ல. மனுதாரர்தான் பேருந்தின் இடதுபுற முகப்பு விளக்கில் மோதி கீழே விழுந்துவிட்டார். ஊத்தங்கரை காவல் நிலையத்தில் எனக்கு எதிராக குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.3 புகாரில் புகார் கொடுத்த தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி புகாரில் குறிப்பிடப்படாத நிலையில் வழக்கிற்கு ஏற்றாற்போல் பின்னிட்டு தயாரித்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் உண்மையில் எ.ம.சா.ஆ.3ல் கண்டபடி புகார் கொடுத்திருந்தால் புகார் மனு ஏற்பு ரசீது வழங்கப்பட்டிருக்கும் என்றால் சரிதான், எனக்கு புகார் மனு ஏற்பு ரசீது கொடுக்கவில்லை.

எ.ம.சா.ஆ.1 குற்ற இறுதி அறிக்கையானது நான் அரசு பணியில் இருப்பதால் எனக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படக்கூடாது என்பதற்காக நான் கேட்டுக்கொண்டபடி வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. விபத்தானது எனது அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான்தான் பேருந்தை அஜாக்கிரதையாக ஓட்டிச்சென்று எதிர்திசையில் வந்த மனுதாரர்மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டேன் என்றால் சரியல்ல. மனுதாரர்தான் தவறான திசையில் வந்தார். மேற்படி சாலை இருவழிச்சாலை என்றால் சரிதான். ஒரே சமயத்தில் இரு கனரக வாகனங்கள் அந்த சாலையில் போகக்கூடும் என்றால் சரிதான். மனுதாரர் தவறான திசையில் வந்து பேருந்தின்மீது மோதியதாக எ.ம.சா.ஆ.3 புகாரிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. விபத்து எனது கவனக்குறைவால் ஏற்பட்டதால் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.